Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC. 2/2018

**P.W**.2 (LW6)

| | | |
|---|---|---|
| Name | : | **திரு.ராஜசேகரன்** |
| Father/Husband Name | : | திரு.**மனோகர்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

5 வது எதிரி ஆஜரில் உள்ளார். 1 வது எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் உள்ளார். 2 மற்றும் 4 வது எதிரி splitup செய்யப்பட்டு இந்த விசரணையின் நகல் Crl.Rules of Practice 2019 விதி 32(5)-ன் படி CC 179/2023 வழக்குடன் இணைக்கப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் முள்ளிகொளத்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி அருள்தாஸ் என்னுடைய கிராம உதவியாளர் ஆவார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான்.

கடந்த 20.08.2017 ம் தேதி மதியம் சுமார் 2.15 மணியளவில் திருக்கழுக்குன்றம் கருங்குழி சாலையில் உள்ள எம்.ஜி.ஆர் சிலை அருகே எதிரி சீதாலட்சுமி என்பவரை போலிசார் விசாரணை செய்துக் னகொண்டிருந்தார்கள். அப்போது சீதாலட்சுமி என்பவர் தான் திருடியதை

ஒப்புக் கொண்டார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சாட்சி அருள்தாஸ் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் "*என்னை அழைத்துச் சென்றால் நாங்கள் திருடிய அத்தனை இடங்களையும் அடையாளம் காட்டுவேன். தற்போது விற்பதற்காக எடுத்து வந்த நத்தம் கிராமத்தில் திருடிய நகைகளையும், பூந்தண்டலம் கிராமத்தில் திருடிய நகைகளையும் தங்களிடம் ஆஜர் படுத்துவேன். மேலும் கொத்திமங்களம் வள்ளுவர் தெருவில் திருடிய நகைகளையும், ஓரகடம் கிராமத்தில் திருடிய நகைகளையும் கல்பனா வீட்டில் மறைத்து வைத்துள்ளதை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர்படுத்துவேன்*" என்றும் கூறினார். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அதன் தொடர்ச்சியாக அதே நாள் மதியம் 14.25 மணியளவில் அதே இடத்தில் எதிரி சீதாலட்சுமி அவரிடமிருந்து எடுத்து ஆஜர் செய்த நகைகளை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் நானும், சாட்சி அருள்தாஸ் என்பவரும் கையொப்பம் செய்தோம். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் தற்போது நத்தம் கரியச்சேரி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்து வருகிறேன். திருக்கழுக்குன்றம் எம்.ஜி.ஆர். சிலை உள்ள பகுதியான நான் பணிபுரிந்து வந்த முள்ளிக்கொளத்தூர் கிராம நிர்வாகத்திற்கு உட்பட்டதல்ல என்றால் சரிதான். திருக்கழுக்குன்றம் எம்.ஜி.ஆர். சிலை இருக்கும் இடமானது பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றாலும் கடைகள் அதிகம் இருக்கும் என்றாலும் சரிதான்.

எதிரி சீதாலட்சுமியை போலிசார் மதியம் சுமார் 12.15 மணியளவில் விசாரணை செய்தார்கள். என்னுடைய அன்றாட அலுவலக பணிகள் குறித்து movement register–ரில் எழுதிவைத்துவிட்டு தான் செல்வேன் என்றால் நான் சொன்ன 20.08.2017 ஞாயிற்றுக் கிழமை என்பதால் movement register–ரில் குறிப்பிடவில்லை. நான் சொல்வது போல் எதிரி சீதாலட்சுமி எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி சீதாலட்சுமி, எதிரி கல்பனாவிடம் நகைகளை கொடுத்து வைத்திருப்பதாக எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மகஜரில் கைப்பற்றப்பட்ட நகைகளின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். நான் அரசு ஊழியர் என்பதால் போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசாரின் கையிருப்பு சாட்சி என்றாலும், போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பல வழக்குகளில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இதற்கு முன்பு எத்தனை வழக்குகளில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் இந்த வழக்கில் மட்டும் தான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். வாக்குமூலத்தில் யார் கைப்பட எழுதினார்கள் என்றால் காவலர் ஒருவர் எழுதினார். யார் என்று எனக்கு சரியாக தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over
in the witness in the present of the accused
and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.